අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/17/03/01/01/01 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2026.01. 02

அனைத்து மாகாண கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்துப் பிரிவெனாதிபதிகள்,
அனைத்து அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் அதிபர்களுக்கு

**புதிய கல்வி மறுசீரமைப்புக்களின் கீழ் 2026 ஆம் ஆண்டிற்கான பாடசாலை கால அட்டவணையைத் திருத்தம் செய்தல் மற்றும் கல்விசார் பணிக்குழுவினரைப் பயன்படுத்துதல் தொடர்பான அறிவுறுத்தல் கோவை**

ஏற்கனவே தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் மற்றும் அறிவுறுத்தல் கடிதங்களின் மூலம் பாடசாலைகளின் தரம் 5 மற்றும் தரம் 6-13 வரையான தரங்களுக்காக 2026 ஆம் ஆண்டின் புதிய பாடசாலைத் தவணை ஆரம்பத்திலிருந்து நாளாந்தம் பாடசாலை முடிவடையும் நேரம் பி.ப. 2.00 மணி என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நாட்டில் கடந்த நாட்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்த நிலைமையின் காரணமாக குறிப்பாக சில மாகாணங்களில் பாடசாலைக் கட்டமைப்புக்கும் அதேபோன்று போக்குவரத்து கட்டமைப்புக்கும் ஏற்பட்ட கடும் சேதங்களைக் கருத்திற்கொண்டு, பாடசாலை நேரத்தை நீடிப்பதன் மூலம் அந்த மாகாணங்களின் பாடசாலை பிள்ளைகளுக்கும் ஏனைய தரப்பினருக்கும் பல சிரமங்கள் ஏற்படக்கூடும் என அவதானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, பாடசாலை நடத்தும் நேரத்தை நீடிக்கும் தீர்மானம் 2026 ஆம் ஆண்டிற்குள் நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது.

2. அதற்கமைய, 2026 ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படும் புதிய கல்வி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதுடன் இணைந்ததாக பாடசாலைகளின் தரம் 6-13 தரங்களுக்கான பாடசாலை கால அட்டவணையைத் தயாரிப்பது தொடர்பாக 2025.11.04 ஆம் திகதியிட்ட இலக்கம் 34/2025 கொண்ட சுற்றுநிருபம் மற்றும் எனது இலக்கம் ED/16/01/05/10/-IIවෙළුම, மற்றும் 2025.11.04 ஆம் திகதியிட்ட புதிய கல்வி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதுடன் இணைந்ததாக ஆரம்பக் கல்விப் பிரிவின் பாடசாலை கால அட்டவணையைத் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல் கடிதம் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளின் தரம் 6-13 இற்கான கால அட்டவணையைத் தயாரித்தல் எனும் தலைப்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இலக்கம் ED/09/55/02/11 மற்றும் 2025.12.16 ஆம் திகதியிட்ட அறிவுறுத்தல் கடிதம், மேலதிக கல்வி மொடியூல்கள் மற்றும் நிலைமாற்றுத் திறன்கள் பற்றிய அறிவுறுத்தல் கோவை எனும் தலைப்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இலக்கம் ED/17/03/01/01/01 மற்றும் 2025.12.15 ஆம் திகதியிட்ட கடிதம் மற்றும் பாடசாலையொன்றில் இருக்க வேண்டிய கல்விப் பணியாளர்களைத் தீர்மானிப்பதற்கான 2021.04.28 ஆம் திகதியிட்ட

இலக்கம் 6/2021 உடைய சுற்றுநிருபம் மற்றும் 2024.09.06 ஆம் திகதியிட்ட இலக்கம் 6/2021 (i) உடைய சுற்றுநிருபம் ஆகியவற்றுக்கு மேலதிகமாக இந்த அறிவுறுத்தல் கோவை வெளியிடப்படுகின்றது. அதற்கமைய, 2026 ஆம் ஆண்டில் பாடசாலை நடத்தப்படும் நேரத்தை தற்போது நடைமுறையிலுள்ளவாறே மு.ப. 7.30 முதல் பி.ப. 1.30 வரை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. முன்னர் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, புதிய கல்வி மறுசீரமைப்புச் செயன்முறையானது 2026 ஆம் ஆண்டிலிருந்து தரம் 1 மற்றும் தரம் 6 இற்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

### 3. புதிய கல்வி மறுசீரமைப்புக்களின் கீழ் பாடசாலைகளை ஆரம்பித்தல்

**தரம் 1 மற்றும் தரம் 6 தவிர்த்து, பாடசாலைகளின் ஏனைய தரங்களுக்கான முதலாம் தவணை 2026.01.05ஆம் திகதி ஆரம்பமாகும். தரம் 6 இன் முதலாம் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் திகதி 2026 ஜனவரி மாதம் 21 ஆகும். (இருப்பினும், புலமைப்பரிசில் பெறுபேறுகளின் அடிப்படையில் தரம் 6 இற்கு பிற பாடசாலைகளிலிருந்து மாணவர்களை அனுமதிப்பதற்கான நிர்வாக நடவடிக்கைகள் ஜனவரி 05 முதல் ஆரம்பிக்கும் வாரத்தினுள் மேற்கொள்ளப்படலாம்)**

தரம் ஒன்றிற்காக பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பாக இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள இலக்கம் ED/16/01/05/01/ மற்றும் 2025.12.16 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். **அதற்கமைய, தரம் ஒன்றிற்கான பிள்ளைகளை இனங்காணும் செயன்முறை 2026 ஜனவரி மாதம் 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்படுவதுடன், உத்தியோகபூர்வமாக கற்றல் நடவடிக்கைகள் 2026 ஜனவரி மாதம் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.**

### 4. பாடசாலை நேரம் மற்றும் பாடவேளைகளின் எண்ணிக்கை

4.1 சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலமான பாடசாலைகளில் கல்வி மறுசீரமைப்புக்கள் நேரடியாக நடைமுறைப்படுத்தப்படும் தரம் 1 மற்றும் தரம் 6 ஆகிய தரங்களுக்காகவும் அதேபோன்று ஏனைய தரங்களுக்காகவும், உரிய கால அட்டவணைகள் தொடர்பாக பின்வரும் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். முஸ்லிம் பாடசாலைகளுக்கான கால அட்டவணைகளைத் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்கள் இக்கடிதத்தின் 6 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

4.2 ஆரம்பக் கல்விப் பிரிவின் தரம் 1-4 வரையான தரங்களுக்கான கால அட்டவணையை, எனது இலக்கம் ED/16/01/05/10- වෙළුම மற்றும் 2025.11.04 ஆம் திகதியிட்ட 'புதிய கல்வி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கு இணையாக ஆரம்பக் கல்விப் பிரிவின் பாடசாலை கால அட்டவணையைத் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல் கடிதம்' என்பதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறே நடைமுறைப்படுத்துதல்.

4.3 தரம் 5 இற்கான பாடசாலை நடத்தப்படும் நேரம் மு.ப. 7.30 - பி.ப. 1.30 எனத் திருத்தப்பட்டுள்ளமையால், அதற்குரிய திருத்தப்பட்ட கால அட்டவணையை இந்த அறிவுறுத்தல் கோவையின் 5.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு சிங்கள மற்றும் தமிழ் மொழிமூலப் பாடசாலைகளிலும், குறித்த கற்றல் துறைகளை பூர்த்தி செய்யும் வகையில் இலக்கம் 06 இல் காட்டப்பட்டுள்ளவாறு முஸ்லிம் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

4.4 உரிய சுற்றுநிருபத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படியே, தரம் 6-13 வரையான தரங்களுக்காக ஒரு நாளில் 7 பாடவேளைகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதன்போது ஒரு பாடவேளைக்காக 45 நிமிடங்களை ஒதுக்குதல். (இது தரம் 6-13 வரையான அனைத்து தரங்களுக்கும் பொருந்தும் என்பதுடன், தற்போது தயாரிக்கப்பட்டுள்ள கால அட்டவணைகளில் நேரத்தை மாத்திரம் இதற்கமைய திருத்தங்களை செய்துகொள்ள வேண்டும்.)

4.5 பாடசாலைகளில் தரம் 6-13 வரையான தரங்களுக்காக பாடசாலை கால அட்டவணையைத் தயாரித்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள் உள்ளடங்கிய 2025.11.04 ஆம் திகதியிட்ட 34/2025 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 3.3 மற்றும் 3.4 ஆகிய இலக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

**தரம் 6 இற்கான புதிய கலைத்திட்ட மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்தல்**

- அழகியல் பாடங்களின் கீழ் உள்ளடங்குபவை இலக்கம் 6.1.2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களாகும்.

  இதன்கீழ் இலக்கம் 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கிய நயம் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்/ அரபு) தரம் 6 இற்கு பொருந்தாது.

**கனிஷ்ட இரண்டாம் நிலைத் தரங்களுக்காக பழைய கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

- அழகியல் பாடங்களின் கீழ் உள்ளடங்குபவை இலக்கம் 6.1.2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களாகும்

  இதன்கீழ் இலக்கம் 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கிய நயம் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்/ அரபு) தரம் 7-9 வரையான தரங்களுக்குப் பொருந்தாது.

4.6 புதிய கல்வி மறுசீரமைப்புக்களுக்கு அமைய, மொடியூல் அடிப்படையிலான கற்றல் செயன்முறையினூடாக எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளவாறே, தரம் 6 மாணவர்கள் ஒரு வருடத்தில் அடைந்து கொள்ள வேண்டிய மொத்தத் திறமை மட்டங்களின் (Credits) அளவிலும் (105 திறமை மட்டங்கள்) மற்றும் ஒரு திறமை மட்டத்திற்கான மாணவர் கற்றல் நேரத்திலும் (600 நிமிடங்கள்) எவ்வித மாற்றமும் ஏற்படாது.

4.7 இச் செயன்முறையினை 2026 ஆம் ஆண்டிற்காகச் செயற்படுத்தும் போது, தற்போது பழைய பாடத்திட்டம் நடைமுறையிலுள்ள தரம் 7-11 வரையான தரங்களின் ஒவ்வொரு

பாடத்திற்காகவும் ஒதுக்கப்படும் மொத்த நேரம் சிறிதளவு குறைவடைவதால், அந்த நேரத்தைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகவும் மற்றும் தரம் 6 இற்குரிய மொடியூல்களுக்குத் தேவையான நேரத்தைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகவும் முதலாம் தவணைப் பரீட்சையை நடாத்தாது, அந்த காலப்பகுதியையும் கற்றல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**5. சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலமான பாடசாலைகளில் கால அட்டவணைகளைத் தயாரிக்கும் முறை :-**

**5.1 தரம் 5 இற்குரியது :-**

| கற்றல் துறைகள் | ஒரு வாரத்திற்கு ஒதுக்கப்படும் நேரம் |
|---|---|
| தாய்மொழி | 5 மணித்தியாலயம் |
| கணிதம் | 5 மணித்தியாலயம் |
| சுற்றாடல் சார் செயல்பாடுகள் | 7 மணித்தியாலயம் 30 நிமிடங்கள் |
| ஆங்கிலம் | 3 மணித்தியாலயம் 05 நிமிடங்கள் |
| இரண்டாம் தேசிய மொழி | 1 மணித்தியாலயம் |
| சமயம் | 2 மணித்தியாலயம் |
| காலைக் கூட்டம் மற்றும் சமய அனுஷ்டானங்கள் | 1 மணித்தியாலயம் 15 நிமிடங்கள் (ஒரு நாளில் 15 வீதம்) |
| இடைவேளை | 2 மணித்தியாலங்கள் 05 நிமிடங்கள் (ஒரு நாளைக்கு 25 நிமிடங்கள் - பாடசாலை உணவுத் வேலைத்திட்டத்திற்காக மு.ப. 7.30 - மு.ப. 8.30 இற்கிடையில் 15 நிமிடங்களும் மற்றும் இடைவேளைக்காக 10 நிமிடங்களும் வீதம்) |
| உடற்பயிற்சி செயற்பாடுகள் | 2 மணித்தியாலயம் 05 நிமிடங்கள் ( ஒரு நாளில் 25 நிமிடங்கள் வீதம்) |
| இணைப் பாடவிதான செயற்பாடுகள் | 30 நிமிடங்கள் |
| தெரிவுக்குரிய செயற்பாடுகள் | 30 நிமிடங்கள் |
| **ஒரு வாரத்திற்கான மொத்த நேரம்** | **30 மணித்தியாலங்கள்** |

**5.2 தரம் 6-13 இற்குரியது :-**

| நேரம் | **செயற்பாடு/ பாடவேளை** |
|---|---|
| மு.ப. 7.30- மு.ப. 7.45 | சமய அனுஷ்டானங்கள் / காலைக் கூட்டம் |
| மு.ப. 7.45- மு.ப. 8.30 | முதலாம் பாடவேளை |
| மு.ப. 8.30- மு.ப. 8.35 | வரவு இடாப்பில் பதிவு செய்தல் |
| மு.ப. 8.35- மு.ப. 9.20 | இரண்டாம் பாடவேளை |
| மு.ப. 9.20- மு.ப. 10.05 | மூன்றாம் பாடவேளை |

| | |
|---|---|
| மு.ப. 10.05- மு.ப. 10.30 | இடைவேளை |
| மு.ப. 10.30- மு.ப. 11.15 | நான்காம் பாடவேளை |
| மு.ப. 11.15- பி.ப. 12.00 | ஐந்தாம் பாடவேளை |
| பி.ப. 12.00- பி.ப. 12.45 | ஆறாம் பாடவேளை |
| பி.ப. 12.45- பி.ப. 1.30 | ஏழாம் பாடவேளை |

**6. முஸ்லிம் பாடசாலைகளின் தரம் 5-13 வரையான தரங்களுக்கான கால அட்டவணைகளைத் தயாரிக்க வேண்டிய முறை :-**

6.1 முஸ்லிம் பாடசாலைகளின் கால அட்டவணையைத் தயாரிப்பது தொடர்பாக பின்வரும் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும்

6.1.1 ஒரு பாடவேளைக்காக 45 நிமிடங்களை ஒதுக்குதல்.

6.1.2 திங்கள் முதல் வெள்ளி வரை பாடசாலை ஆரம்பமாகும் நேரம் மு.ப. 7.30 ஆகும் என்பதுடன், திங்கட்கிழமை மாத்திரம் 7 பாடவேளைகளை நடைமுறைப்படுத்தி, பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை நடவடிக்கைகளை நிறைவு செய்தல்.

6.1.3 செவ்வாய் முதல் வியாழன் வரையான 03 நாட்களில் ஒரு நாளைக்கு 8 பாடவேளைகள் வீதம் நடைமுறைப்படுத்தி, பாடசாலை நடவடிக்கைகளை பி.ப. 2.15 மணிக்கு நிறைவு செய்தல். (சமய அனுஷ்டானங்களை மேற்கொள்வதற்காக பி.ப. 12.30 முதல் பி.ப. 12.45 வரை கால அட்டவணையில் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நேரத்தை பிரதேச ரீதியாக நிலவும் கால நேர சூழ்நிலைகளுக்கு ஏற்பவும், நெகிழ்வுத்தன்மையுடன் பயன்படுத்திக்கொள்ள முடியும்.)

6.1.4 இஸ்லாமியர்கள் வெள்ளிக்கிழமைகளில் தமது சமய அனுஷ்டானங்களை நிறைவேற்றுவதற்காக பள்ளிவாசலுக்குச் செல்வதற்கு ஏதுவாக, வெள்ளிக்கிழமை மாத்திரம் 4 பாடவேளைகளை நடைமுறைப்படுத்திய பின்னர் மு.ப. 11.15 மணிக்கு பாடசாலை நடவடிக்கைகளை நிறைவு செய்தல்

**6.2 கால அட்டவணை செயற்படுத்தப்படும் விதம் :-**

**6.2.1 முஸ்லிம் பாடசாலைகளில் திங்கட் கிழமைக்கான கால அட்டவணை**

| நேரம் | செயற்பாடு/ பாடவேளை |
|---|---|
| மு.ப .7.30 - மு.ப.7.45 | சமய அனுஷ்டானங்கள் / காலைக் கூட்டம் |
| மு.ப .7.45 - மு.ப.8.30 | முதலாம் பாடவேளை |
| மு.ப .8.30 - மு.ப .8.35 | வரவு இடாப்பில் பதிவு செய்தல் |

| | |
|---|---|
| மு.ப .8.35 - மு.ப .9.20 | இரண்டாம் பாடவேளை |
| மு.ப.9.20 - மு.ப .10.05 | மூன்றாம் பாடவேளை |
| மு.ப.10.05 - மு.ப .10.30 | இடைவேளை |
| மு.ப.10.30 - மு.ப .11.15 | நான்காம் பாடவேளை |
| மு.ப.11.15 – பி.ப. 12.00 | ஐந்தாம் பாடவேளை |
| பி.ப .12.00 - பி.ப .12.45 | ஆறாம் பாடவேளை |
| பி.ப .12.45 - பி.ப .1.30 | ஏழாம் பாடவேளை |

**6.2.2 முஸ்லிம் பாடசாலைகளில் செவ்வாய் முதல் வியாழக் கிழமை வரையான கால அட்டவணை**

| நேரம் | செயற்பாடு/ பாடவேளை |
|---|---|
| மு.ப.7.30 - மு.ப.8.15 | முதலாம் பாடவேளை |
| மு.ப. 8.15 - மு.ப.8.20 | வரவு இடாப்பில் பதிவு செய்தல் |
| மு.ப.8.20 - மு.ப.9.05 | இரண்டாம் பாடவேளை |
| மு.ப.9.05 - மு.ப.9.50 | மூன்றாம் பாடவேளை |
| மு.ப.9.50 - மு.ப.10.35 | நான்காம் பாடவேளை |
| மு.ப. 10.35 - மு.ப.11.00 | இடைவேளை |
| மு.ப. 11.00 - மு.ப.11.45 | ஐந்தாம் பாடவேளை |
| மு.ப. 11.45 – பி.ப. 12.30 | ஆறாம் பாடவேளை |
| பி.ப.12.30 - பி.ப.12.45 | சமய அனுஷ்டானங்கள் |
| பி.ப.12.45 - பி.ப. 1.30 | ஏழாம் பாடவேளை |
| பி.ப.1.30 - பி.ப. 2.15 | எட்டாவது பாடவேளை |

**6.2.3 முஸ்லிம் பாடசாலைகளில் வெள்ளிக் கிழமைக்கான கால அட்டவணை**

| நேரம் | செயற்பாடு/ பாடவேளை |
|---|---|
| மு.ப.7.30 - மு.ப.7.45 | காலைக் கூட்டம் மற்றும் சமய அனுஷ்டானங்கள் |
| மு.ப. 7.45 - மு.ப.8.30 | முதலாம் பாடவேளை |
| மு.ப.8.30 - மு.ப.8.35 | வரவு இடாப்பில் பதிவு செய்தல் |
| மு.ப.8.35 - மு.ப.9.20 | இரண்டாம் பாடவேளை |
| மு.ப.9.20 - மு.ப.9.45 | இடைவேளை |
| மு.ப.9.45 - மு.ப.10.30 | மூன்றாம் பாடவேளை |
| மு.ப. 10.30 - மு.ப.11.15 | நான்காம் பாடவேளை |

## 7. மேலதிக கற்றல் மொடியூல்கள்

7.1 2026 புதிய கல்வி மறுசீரமைப்புக்களுடன் தொடர்புடைய மேலதிக கற்றல் மொடியூல்கள் மற்றும் நிலைமாற்றுத் திறன் மொடியூல்கள் பற்றிய அறிவுறுத்தல் கோவை எனும் தலைப்பில் இலக்கம் ED/17/03/01/01/01 மற்றும் 2025.12.15 ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட

அறிவுறுத்தல் கையேட்டில், மேலதிக கற்றல் மொடியூல்களைத் தெரிவு செய்தல் தொடர்பான II ஆம் பகுதியில் 2026 ஆம் ஆண்டின் முதலாம் தவணைக்காக அறிமுகப்படுத்தப்படும் பாடங்களுக்குரிய மேலதிக கற்றல் மொடியூல்கள் பற்றிய அட்டவணையின் உப இலக்கம் 4 பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

| பாடம் | மொடியுலின் பெயர் | தவணை | மொழி மூலம் | | |
|---|---|---|---|---|---|
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
| தாய் மொழி (சிங்களம்/ தமிழ்) | இலக்கிய நயம் | I | √ | √ | - |
| ஆங்கிலம் | Appreciation of Literature - Into the Wild | I | - | - | √ |

7.2 இதற்கமைய அறிமுகப்படுத்தப்படும் மேலதிக கற்றல் பாடங்களின் எண்ணிக்கை 7 ஆகும். தாய்மொழி (சிங்களம்/ தமிழ்) மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுடன் தொடர்புடைய இந்த மேலதிக கற்றல் மொடியூல்களை முதலாம் தவணையில் கற்பதற்கான சந்தர்ப்பம் மாணவர்களுக்குக் கிடைக்கும்.

**8. கல்விசார் பணிக்குழுவினரைப் பயன்படுத்துதல்**

8.1 புதிய கல்வி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதுடன் இணைந்ததாக பாடசாலையொன்றில் இருக்க வேண்டிய கல்விசார் பணிக்குழுவினரைப் பயன்படுத்துவது பின்வரும் அறிவுறுத்தல்களின்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.

8.2 கலைத்திட்டத்தைப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில், தற்போது நடைமுறையிலுள்ள 06/2021 மற்றும் 06/2021(i) ஆகிய சுற்றுநிருபங்களின்படி அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் பணிக்குழுவினரைப் பயன்படுத்திக்கொள்வதற்குப் பின்வருமாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், 06/2021 மற்றும் 06/2021(i) ஆகிய சுற்றுநிருபங்களின் ஏனைய ஏற்பாடுகளும் அறிவுறுத்தல்களும் அவ்வாறே தொடர்ந்தும் வலுவில் இருக்கும்.

**8.3 மேற்பார்வை ஆசிரியர்கள்** (சுற்றுநிருபம் 06/2021 இன் 9.2 மற்றும் 9.3 என்பன பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றன.)

- மேற்பார்வை ஆசிரியர்கள் வாரத்திற்கு குறைந்தபட்சம் 14 பாடவேளைகள் கற்பித்தல் பணிகளில் ஈடுபடுதல் வேண்டும்

**8.4 கற்பித்தலில் ஈடுபட வேண்டிய குறைந்தபட்ச காலம்** (சுற்றுநிருபம் 06/2021 இன் இலக்கம் 10.1 பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.)

- ஓர் ஆசிரியர் வாரத்திற்கு கடமையாற்ற வேண்டிய மொத்த பாடவேளைகளின் எண்ணிக்கை 35 ஆகும். அதில் கடமை ரீதியான விடுவிப்புகளின் போது தவிர்த்து, ஒரு ஆசிரியர் வாரத்திற்கு குறைந்தபட்சம் 28 பாடவேளைகள் பாடம் சார்ந்த கற்றல் கற்பித்தல் செயன்முறையில் ஈடுபடுதல் வேண்டும்.

**8.5 உதவி அதிபர்கள்** (சுற்றுநிருபம் 06/2021 இன் இலக்கம் 11 பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.)

- உதவி அதிபர்கள் வாரத்திற்கு குறைந்தபட்சம் 10 பாடவேளைகள் கற்பித்தல் செயன்முறையில் ஈடுபடுதல் வேண்டும்

**8.6 பிரதி அதிபர்கள்** (சுற்றுநிருபம் 06/2021 இன் இலக்கம் 12 பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.)

- பிரதி அதிபர்கள் வாரத்திற்கு குறைந்தபட்சம் 08 பாடவேளைகள் கற்பித்தல் செயன்முறையில் ஈடுபடுதல் வேண்டும்

மேலும், இந்த ஒட்டுமொத்த அறிவுறுத்தல் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்கள் தவிர்ந்த, புதிய கல்வி மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்துவது தொடர்பாக இதுவரை வெளியிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து அறிவுறுத்தல்களும் சுற்றுநிருபங்களும் 2026 ஆம் ஆண்டிற்குப் பொருந்தும் வகையில் அவ்வாறே நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

நாலக கலுவெவ
செயலாளர்

பிரதிகள் :

1. அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்
2. அனைத்து மாகாண ஆளுநர் செயலாளர்கள்
3. தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு
4. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
5. பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம்
6. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்